**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர்—சரவண குமார்**

**தேதி 18.6.2025        நேரம் மாலை 6.10 மணி**

---------------------------------------------------------------

**<u>தலைப்புச் செய்திகள்</u>**

- பாகிஸ்தானுடனான பிரச்சனைகளில் மத்தியஸ்தம் எதையும் இந்தியா ஏற்காது என்று, பிரதமர் திரு நரேந்திர மோடி, அமெரிக்க அதிபரிடம் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.
- பிரதமர் திரு நரேந்திர மோடி கனடாவில் அந்நாட்டு பிரதமரை சந்தித்த போது, இருதரப்பு உறவுகளின் முக்கியத் துவத்தை, இரு தலைவர்களும் மீண்டும் வலியுறுத்தினர்.
- புதுச்சேரியில், மாடி தோட்டம் குறித்த என் வீடு-என் நலம் திட்டத்தை,  இன்று முதலமைச்சர் திரு ரங்கசாமி தொடக்கி வைத்து, தோட்டக் கலை உபகரணத் தொகுப்புகளை, பயனாளிகளுக்கு வழங்கினார்.
- பேரிடர் சம்பவங்களின் போது  மருத்துவ உதவிகளை உடனுக்குடன் வழங்குவதற்கான, பீஷ்ம் உபகரணப் பெட்டகங்களின் பயன்பாடு, புதுச்சேரி ஜிப்மரில் இன்று தொடக்கி வைக்கப்பட்டது.

***<u>ே□ாடி-டிரம்ப்</u>***

பாகிஸ்தானுடனான பிரச்சனைகளில் 3-ஆவது தரப்பினரின் மத்தியஸ்தம் எதையும் இந்தியா ஏற்காது என்று, பிரதமர் திரு நரேந்திர மோடி, அமெரிக்க அதிபர் திரு டொனால்ட் டிரம்பிடம் உறுதிபட தெரிவித்துள்ளார். ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி, அமெரிக்க அதிபருடன் தொலைபேசி மூலம் உரையாடல் நடத்தினார். இந்தியா-அமெரிக்கா வர்த்தக பேரம், மற்றும்,

ராணுவ நடவடிக்கையை நிறுத்துவதில், இந்தியாவிற்கும்-பாகிஸ்தானுக்கும் இடையே அமெரிக்கா மூலமான மத்தியஸ்தம் குறித்து, எந்த நிலையிலும் பேசப்படவில்லை என்று, பிரதமர் தெளிவுபட தெரிவித்தார். ராணுவ நடவடிக்கையை நிறுத்துவது பற்றிய பேச்சு வார்த்தைகள், புதுடெல்லிக்கும், இஸ்லாமாபாத்திற்கும் இடையே, ஏற்கனவே உள்ள, ராணுவ ரீதியிலான வழிகளில், பாகிஸ்தானிய வேண்டுகோளின் பேரில் நேரடியாக நடைபெற்றதாகவும், அவர் கூறினார்.

இந்தியாவிற்கும், பாகிஸ்தானுக்கும் இடையிலான சண்டையை தானே தலையிட்டு நிறுத்தியதாக அமெரிக்க அதிபர் மீண்டும், மீண்டும் கூறி வருவதை இந்தியா ஏற்கனவே மறுத்துள்ள நிலையில், பிரதமர் திரு நரேந்திர மோடியின் இக்கருத்துக்கள் வெளியாகி உள்ளன. தீவிரவாத தாக்குதல்களை, இந்தியா இனி, நிழல் யுத்தமாக அன்றி, போராகவே எடுத்துக் கொள்ளும் என்பதையும் பிரதமர் திரு நரேந்திர மோடி இந்த தொலைபேசி உரையாடலின் போது மீண்டும் வலியுறுத்தியதாக, வெளியுறவுச் செயலர் திரு விக்ரம் மிஸ்ரி தெரிவித்துள்ளார்.

கனடாவில் ஜி-7 உச்சி மாநாட்டின் நிகழ்வுகளுக்கு இடையே அமெரிக்க அதிபரை பிரதமர் திரு நரேந்திர மோடியை சந்திப்பதாக இருந்த போதிலும், அமெரிக்க அதிபர் முன் கூட்டியே தாயகம் திரும்ப நேர்ந்ததால், சந்திப்பு திட்டமிட்டபடி நடைபெறவில்லை.

*ே□ாடி-கனடா-*

இந்தியாவில் கனடா தூதரகத்தையும், கனடாவில் இந்திய தூதரகத்தையும் மீண்டும் நிறுவ இரு நாடுகளும் ஒப்புக் கொண்டுள்ளன. கனடாவின் கனநாஸ்கிஸ் நகரில், ஜி-7 உச்சி மாநாட்டின் நிகழ்வுகளுக்கு இடையே பிரதமர் திரு நரேந்திர மோடி, கனடா பிரதமர் திரு மார்க் கார்னி-யுடன் நடத்திய இருதரப்பு சந்திப்பின் போது, இந்தியா-கனடா உறவுகளின்

முக்கியத் துவத்தை இருதலைவர்களும் வலியுறுத்தினர். வர்த்தகம், போக்குவரத்து இணைப்பு உள்ளிட்ட துறைகளில் உயர் நிலைப் பேச்சு வார்த்தைகளை மீண்டும் தொடக்கவும் இருநாடுகளும் ஒப்புக் கொண்டுள்ளன. தூய எரிசக்தி, டிஜிட்டல் வசதிகள், உயர்கல்வி, செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட துறைகளில் எதிர்கால ஒத்துழைப்பிற்கான வாய்ப்புகள் குறித்தும் விவாதிக்கப்பட்டதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

*யோகா*

11-ஆவது சர்வதேச யோகா தினம், வரும் 21-ஆம் தேதி உலகம் முழுவதிலும் கொண்டாடப்படுகிறது. இந்திய பாரம்பரிய மரபுகளில் ஒன்றான யோகா, தற்போது உலக இயக்கமாக மேம்பட்டுள்ளது குறித்து ஒரு செய்தித் தொகுப்பு……………….

(வாய்ஸ்)

*யோகா-2*

(வாய்ஸ்)

யோகாவின் வரலாறு, தொன்மையான இந்திய கலாச்சாரத்தில் ஆழமாக வேரூன்றிய ஓர் வரலாறாகும். சிந்து-சரஸ்வதி பள்ளத்தாக்கின் பழங்கால கலாச்சாரத்தில் தோன்றிய யோக கலை, ஆன்மாவை உணர்வதற்கான சீரான பாதையாக படிப்படியாக வளர்ச்சி அடைந்துள்ளது. பௌத்த மதத்தின் வளர்ச்சிக் காலத்தில் கி மு 500-ஆம் ஆண்டு வாக்கில் யோகா தோன்றியதாக நீண்டகாலமாக அறிஞர்கள் கருதி வருகின்ற போதிலும், இந்து-சரஸ்வதி பள்ளத்தாக்கு நாகரீகம் பற்றிய தொல்லியல் கண்டுபிடிப்புகள். யோகா இன்னும் பழைமையானது என்பதையே வெளிப்படுத்தி உள்ளன. காலப் போக்கில் யோகக் கலை, வேதங்கள்-உபநிஷதங்களில் இருந்து, பதஞ்சலி யோக சூத்திரம் வரை, வளமான

தனிக் கலையாக வளர்ச்சி அடைந்துள்ளது. மகாபாரதத்தில் யோகா குறித்து பல ஆழமான குறிப்புகள் காணப்படுகின்றன. 19-20-ஆம் நூற்றாண்டுகளில், சுவாமி விவேகானந்தர், பிகேஎஸ் அய்யங்கார் போன்ற மாபெரும் குருமார்களால், யோக கலை, பாரம்பரிய மரபு என்பதில் இருந்து, அனைவருக்குமான உலக கலையாக பரிணமித்தது. 2014-ஆம் ஆண்டில் பிரதமர் திரு நரேந்திர மோடி ஐ நா பொதுப் பேரவையில் உரையாற்றி, ஆண்டுதோறும் ஜூன் 21-ஆம் தேதியை, சர்வதேச யோகா தினமாக கொண்டாட வேண்டுமென முன் மொழிந்தார். இந்த உத்தேசம் உறுப்பு நாடுகளின் ஏகோபித்த ஆதரவுடன் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதைத் தொடர்ந்து ஆண்டு தோறும் ஜூன் 21-ஆம் தேதி, சர்வதேச யோகா தினமாக உலக அளவில் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்வாண்டு 11-ஆவது சர்வதேச யோகா தினம், மனித குலத்தின் ஒற்றுமை மற்றும் நலவாழ்வைக் குறிக்கும் வகையில், ஒரே பூமி-ஒரே ஆரோக்கியத்திற்கான யோகா என்ற மையக் கருத்து அடிப்படையில் கொண்டாடப்படுகிறது. ஒருவர் எந்த மதம், இனம் அல்லது நாட்டைச் சேர்ந்தவராக இருந்தாலும் யோகா பயில்வதால், ஆரோக்கியமான, மேம்பட்ட சமநிலையுடன் கூடிய, அர்த்தமுள்ள வாழ்க்கை ஒன்றை பெற முடியும் என்பதே இதன் பொருளாகும்.

*ரங்கசாமி*

புதுச்சேரியில், வீட்டு அளவில் மாடி தோட்டம் அமைப்பதை ஊக்குவிப்பதற்கான என் வீடு-என் நலம் திட்டத்தை இன்று முதலமைச்சர் திரு ரங்கசாமி தொடக்கி வைத்து, 5 ஆயிரம் ரூபாய் மதிப்பில் 21 பொருட்கள் அடங்கிய தோட்டக் கலை உபகரணத் தொகுப்புகளை, சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 200 பயனாளிகளுக்கு இலவசமாக வழங்கினார். நகர மயத்தினால் விவசாய நிலமும், உணவு உற்பத்தியும் குறைந்து வரும் நிலையில் முருங்கை, மிளகாய், தக்காளி போன்றவற்றை வீட்டிலேயே பயிரிட மாடித் தோட்டம் உதவிகரமாக இருக்கும் என்று அவர்

கூறினார். புதுச்சேரியில் 6 ஆயிரம் விவசாயிகளுக்கு சோலார் மின் உற்பத்தி வசதிகளை வழங்கும் திட்டம் விரைவில் தொடக்கப்படும் என முதலமைச்சர் தெரிவித்தார். வீடுகளில் சோலார் பொருத்த மக்கள் முன் வர வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். முதலமைச்சர் மேலும் கூறுகையில் .........

(வாய்ஸ்-ரங்கசாமி)

*ரங்கசாமி*

சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம் இந்நிகழ்ச்சியில் பேசுகையில், இயற்கை வேளாண்மை மற்றும் இயற்கை உணவுகளை நோக்கி மக்கள் செல்வதை புதிய திட்டம் ஊக்குவிக்கும் என்றார்.

வேளாண் துறை சார்பில் தாவரவியல் பூங்காவில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், சட்டமன்ற உறுப்பினர் திரு அனிபால் கென்னடி, அரசுச் செயலர் திரு நெடுஞ்செழியன், தோட்டக்கலை இணை இயக்குநர் திரு சண்முகவேலு உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டனர்.

*புதுச்சேரி-வயிற்றுப் போக்கு*

வயிற்றுப் போக்கு நோயை தடுப்பது குறித்து, புதுச்சேரி அரசின் சுகாதாரத் துறை சார்பில், திலாஸ்பேட் அரசுப் பெண்கள் நடுநிலைப் பள்ளியில் இன்று நடைபெற்ற பிரச்சார நிகழ்ச்சியில் முதலமைச்சர் திரு ரங்கசாமி கலந்து கொண்டு, 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு, ஓஆர்எஸ் பாக்கெட்டுகள் மற்றும் ஜிங்க் மாத்திரைகளை வழங்கினார். சட்டமன்ற உறுப்பினர்கள் திரு ஏகேடி ஆறுமுகம்-திரு ரமேஷ், சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் ரவிசந்திரன் மற்றும் இதர அதிகாரிகள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். மத்திய சுகாதார அமைச்சகத்தின் ஆலோசனை அடிப்படையில், வயிற்றுப் போக்கு நோய்க்கு எதிராக 2 மாத கால பிரச்சார இயக்கம் தற்போது மேற்கொள்ளப்படுகிறது. புதுச்சேரியில்

இவ்வாண்டு இந்த இயக்கத்தின் கீழ், 5 வயதிற்கு உட்பட்ட 74 ஆயிரத்து 390 குழந்தைகள் பயன் பெற உள்ளன.

***ஜிப்□ர்***

பேரிடர் சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு, உயிர் காக்கும் உதவிகளை உடனுக்குடன் வழங்க தேவையான மருத்துவ உபகரணங்களை உள்ளடக்கியதாக, முற்றிலும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டுள்ள பீஷ்ம் அவசரகால மருத்துவ உதவி பெட்டகங்களின் பயன்பாடு, புதுச்சேரி ஜிப்மரில் இன்று தொடக்கி வைக்கப்பட்டது. போர்க் களத் தேவைகளுக்கான அவசரகால மருத்துவ உதவி திட்டத்தின் வழிமுறைகளை ஒட்டி தயாரிக்கப்பட்டுள்ள இப்பெட்டகத்தின் பயன்பாடு குறித்து, முன்னாள் தலைமை ராணுவ அறுவை சிகிச்சை அதிகாரி டாக்டர் தன்மய் ராய் உள்ளிட்ட அதிகாரிகள், செயல் விளக்கம் செய்து காட்டினர். மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் மாநில அரசின் சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் ரவிசந்திரன் ஜிப்மர் இயக்குநர் டாக்டர் வீர்சிங் நேகி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். தலா 20 கிலோ எடை உள்ள பீஷ்ம் மருத்துவ உதவிப் பெட்டகங்களை, பேரிடர் பகுதிகளுக்கு உடனுக்குடன் எளிதாக எடுத்துச் செல்ல முடியும் என்பதும் குறிப்பிடத் தக்கது.

***வானிலை***

தமிழகத்திலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் வரும் 24-ஆம் தேதி வரை, லேசானது முதல் மிதமான மழை நீடிக்கலாம் என்றும், இன்றைய தினம் நீலகிரி மாவட்டத்தின் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும், சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்றும்,நாளையும், வெப்பமும்-ஈரப்பதமும் அதிகமாக இருக்கும் நிலையில் ஒரு சில இடங்களில், அசவுகரியம் ஏற்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்று குஜராத் மற்றும் அதனை ஒட்டிய

பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி இன்று, மத்திய ராஜஸ்தான் பகுதிகளுக்கு நகர்ந்துள்ளது. மேற்கு வங்கம் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் தற்போது நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி வடமேற்கு திசையில், ஜார்கண்ட்ட வழியாக நகரக் கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. சூறாவளி காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள வங்க கடல் பகுதிகள், அரபிக் கடல் பகுதிகள், மற்றும், தமிழகத்தின் கடலோரப் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

<u>ஹாக்கி</u>

இந்திய ஜூனியர் ஆடவர் ஹாக்கி அணி, 4 நாடுகளுக்கு இடையிலான போட்டித் தொடரில் பங்கேற்பதற்காக இன்று பெங்களூரில் இருந்து ஜெர்மனிக்கு புறப்பட்டுச் சென்றுள்ளது. ஏஎஸ் ஹின்டால் தலைமையிலான இந்த அணி, போட்டித் தொடரின் தொடக்க நாளான வரும் 21-ஆம் தேதி, ஜெர்மனி அணியுடன் மோத உள்ளது. ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான போட்டி, வரும் 22-ஆம் தேதியும், ஸ்பெயின் அணிக்கு எதிரான போட்டி, 24-ஆம் தேதியும் நடைபெற உள்ளது.

<u>*ஜிதேந்திர சிங்*</u>

நீண்டகாலமாக நிரப்பப் படாமல் காலியாக இருந்த பணியிடங்களை நிரப்ப, மத்திய அரசு கடந்த 11 ஆண்டுகளில் உறுதியான நடவடிக்கைகளை எடுத்து இருப்பதாக மத்திய பணியாளர் துறை இணை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார். தேசிய ஜனநாயக கூட்டணி அரசு 11 ஆண்டுகளை நிறைவு செய்திருப்பதை ஒட்டி, இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையில் அரசு மேற்கொண்ட நிர்வாக சீர்திருத்தங்களால், அரசு நிர்வாகத்தில் மட்டுமின்றி அதற்கு அப்பாலும் முக்கிய தாக்கங்கள் ஏற்பட்டுள்ளதாக கூறினார். தொழில் நுட்பங்களின் பயன்பாடு மூலம்

மக்களின் வாழ்க்கையை எளிதாக்கவும் அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

<u>சிவராஜ்</u>

தேசிய அளவில் அண்மையில் நடைபெற்ற விக்சித் கிரிஷி சங்கல்ப் அபியான் இயக்கத்தின் போது முன் எப்போதும் இல்லாத அளவில் மொத்தம் 1 லட்சத்து 43 ஆயிரம் கிராமங்களைச் சேர்ந்த, 13.4 கோடி விவசாயிகள் அதிகாரிகளைச் சந்தித்து, வேளாண் ஆராய்ச்சி, விரிவாக்கம் மற்றும் மேம்பாட்டுத் தகவல்களை எடுத்துக் கூறியதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவ்கான் தெரிவித்துள்ளார். இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், முன்னேறிய இந்தியா என்னும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வையில், வேளாண் துறையின் வளர்ச்சி மற்றும் விவசாயிகளின் செழிப்பிற்கு முக்கிய இடம் இருப்பதாக கூறினார். வேளாண் வளர்ச்சி இயக்கத்தின் கீழ் 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இடங்களில் பிரச்சார நிகழ்ச்சிகள் நடைபெற்றதாகவும், குறிப்பாக பழங்குடி கிராமங்கள் மீது சிறப்பு கவனம் செலுத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். இந்த இயக்கத்தினால் வேளாண் ஆராய்ச்சிப் பணிகளுக்கும், விவசாயிகளின் களப் பணிகளுக்கும் இடையே வித்தியாசம் நீக்கப்பட்டு, வேளாண் துறை தொடர்பான புதுமை படைப்புகளையும் விவசாயிகள் தெரிந்து கொண்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்து, உலகின் உணவுக் கூடையாக இந்தியாவை மேம்படுத்துவதே அரசின் இலக்கு என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.